

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ”WTT ஸ்டார் கன்டென்டர் 2025 டேபிள் டென்னிஸ் போட்டியின் வெற்றிக் கோப்பையை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஸ்டூபா விளையாட்டு பகுப்பாய்வு நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் மாலிக், அல்டிமேட் டேபிள் டென்னிஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் இகான்ஷ் குப்தா, பத்மஸ்ரீ மற்றும் கேல் ரத்னா விருது பெற்ற இந்திய டேபிள் டென்னிஸ் நட்சத்திர வீரரான சரத் கமல் ஆகியோர் உடனிருந்தனர்.






துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.3.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ”WTT ஸ்டார் கண்டென்டர் 2025 டேபிள் டென்னிஸ் போட்டியின் வெற்றிக் கோப்பையை அறிமுகப்படுத்தி, பயற்சி ஆட்டத்தை பார்வையிட்டார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயவர் ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப. ஸ்டூபா விளையாட்டு பகுப்பாய்வு நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் மாலிக், அல்டிமேட் டேபிள் டென்னிஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் இகான்ஷ் குப்தா, பத்மஸ்ரீ மற்றும் கேல் ரத்னா விருது பெற்ற இந்திய டேபிள் டென்னிஸ் நட்சத்திர வீரரான சரத் கமல் ஆகியோர் உடனிருந்தனர்.

## தி.மு.கழகமும் திராவிட மாடல் அரசும் இஸ்லாம் சமூகத்தினருக்கு

# எவ்வளவு இக்கட்டான சூழலிலும் துணை நிற்கும்!

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு பேரன்பின் பெருவிழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முழக்கம்!







**சென்னை,மார்ச் 27-**

**சென்னை, இராயப்பேட்டையில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில், `பேரன்பின் பெருவிழா' எனும் முழக்கத்துடன் நடைபெற்ற புனித ரமலான் நோன்புதிறக்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.**

**அப்போது அவர் `திராவிட முன்னேற்றக் கழகமாகட்டும் - நம் திராவிட மாடல் அரசாகட்டும், இஸ்லாமிய பெருமக்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கின்ற வகையில், என்றும் உறுதியோடு செயல்படுவோம்' என்று குறிப்பிட்டார்.**

**விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பாக நடைபெறுகிற புனித ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். `பேரன்பின் பெருவிழா' என்று இந்த விழாவின் தலைப்பே மிகச் சிறப்பாக வைக்கப்பட்டுள்ளது. அதற்கு முதலில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் புனித ரமலான் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எனது அரசியல் வாழ்க்கை!**

`இந்த நிகழ்ச்சிக்கு ஒரேயொரு முறைதான் தேதி கேட்டேன், உடனே வந்துவிட்டார்' என்று இங்கு சுபேர்கான் அவர்கள் சொன்னார்கள். நான் அரசியலில், பொது வாழ்க்கையில் கால் எடுத்து வைத்தவுடன், முதன்முதலாக கைதானது, இஸ்லாமிய மக்களுக்கு எதிராக ஒன்றிய அரசு கொண்டு வந்த குடியுரிமைத் திருத்தச் சட்ட நகலைக் கிழித்து எறிந்த போராட்டத்தில்தான். அப்படித்தான் அரசியல் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தேன்.

நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றைப் படிக்கும்போது நம் அனைவருக்கும் ஒரு விஷயம் தெளிவாகத் தெரியும். மனிதர்கள் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும். நமக்குள் எந்த பேதமும் இருக்கக்கூடாது. ஏழை, எளிய மக்களுக்கு உதவ வேண்டும். நபிகள் நாயகம் சொன்ன அதே கருத்தைப் பின்பற்றியே நம் திராவிட இயக்கமும் தோன்றியது. பேதமில்லா வாழ்வைத் தமிழர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தொடங்கப்பட்டதுதான் நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

**முதன்முதலில் தீர்மானம்!**

கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே நம் இஸ்லாமிய பெருமக்களும், திராவிட முன்னேற்றக் கழகமும் நெருங்கிய உறவை கொண்டுள்ளன. 2021ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்தவுடன் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை, ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று சட்டப்பேரவையில் முதன்முதலில் தீர்மானம் நிறைவேற்றியவர்தான் நம் மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள்.

`முத்தலாக் சட்டம்', `என்.ஆர்.சி.' இப்படி வருடந்தோறும் ஏதாவது ஒரு சிக்கலை ஏற்படுத்தி சிறுபான்மை மக்களை நெருக்கடிக்கு ஆளாக்குகின்ற ஒன்றிய அரசைக் கண்டித்தும், தொடர்ந்து எதிர்த்தும் குரல் கொடுக்கின்ற அரசுதான் நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் என்பதை, என்னைவிட நீங்கள் அதிகம் தெரிந்தவர்கள்.

குறிப்பாக, இப்போது ஒரு பிரச்சினையைக் கையில் எடுத்து இருக்கிறது, ஒன்றிய பா.ஜ.க. அரசு. அது என்ன என்பது உங்களுக்கே தெரியும். அதுதான் `வக்பு வாரிய திருத்த மசோதா'வை நடைமுறைப்படுத்த அவர்கள் துடித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

**அபாய சூழ்நிலை!**

இந்த திருத்தம் அமலுக்கு வந்தால், `வக்பு வாரிய சொத்துகள்' வக்பு வாரியத்திடம் இருந்து அபகரிப்படுகின்ற அபாய சூழ்நிலை ஏற்படும். அதுமட்டுமல்ல, வக்பு வாரியங்களுக்கு ஒன்றிய அரசு சொல்கிற ஆட்களைத்தான் நியமனம் செய்ய வேண்டும் என்று இந்த சட்ட மசோதா சொல்கிறது. முஸ்லிம் அல்லாத நபர்களையும் கூட, அந்த வாரிய உறுப்பினர்களாக நியமிக்கக்கூடிய ஒரு அபாயம் ஏற்படுகிறது. அதனால்தான் நம் தலைவர் அவர்கள் இந்தச் சட்டத்தை ஆரம்ப கட்டத்தில் இருந்து கடுமையாக எதிர்த்து வருகிறார்.

இஸ்லாமிய மக்களின் உரிமைக்காக மட்டுமல்ல உங்களின் கல்வி, சமூகம், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் நம் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டு இருக்கிறது. நம் திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முறையாக ஆட்சிக்கு வந்தபோது, `மீலாது நபி' நாளன்று விடுமுறை தந்தவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

**கலைஞர் செய்த சாதனைகள்!**

உருது பேசுகின்ற முஸ்லிம் மக்களை, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது, வக்பு வாரிய சொத்துகளை பராமரிக்க முதன்முதலில் மானியம் தந்தது, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், உருது அகாடமியைத் தொடங்கியது, கண்ணியமிகு காயிதே மில்லத் நினைவாக மணிமண்டபம் கட்ட நிதி ஒதுக்கியது, காயிதே மில்லத் மகளிர் கல்லூரியை உருவாக்கியதோடு, காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரிக்கு இடம் அளித்தது, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில், இஸ்லாமியர்களுக்கு 3.5% உள் இட ஒதுக்கீட்டைக் கொடுத்தது என கலைஞர் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமிய மக்களுக்குச் செய்த சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இந்த நான்கு ஆண்டுகால ஆட்சியில் நம் முதலமைச்சர் அவர்களும் எண்ணற்றத் திட்டங்களை இஸ்லாமிய மக்களுக்காகத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கிறார். 33 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு வகையிலான இஸ்லாமிய பள்ளிவாசல்கள், தர்காக்கள், கட்டடங்கள் புனரமைப்பு செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. நம் முதலமைச்சர் தலைமையிலான, நம் திராவிட மாடல் அரசு சார்பாக, நாகூர் சந்தன கூடு விழாவிற்கு 45 கிலோ சந்தன கட்டைகளை வழங்கியது. அதுமட்டுமல்ல, நம் அரசின் சார்பாக நாகூர் தர்காவை புனரமைக்க 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அதற்கான பணிகளும் இப்போது நடைபெற்று வருகின்றன.

சிறுபான்மை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையை 2022ஆம் ஆண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்தி விட்டது. ஆனால், ரூபாய் 12 கோடி மதிப்பிலான கல்வி உதவித்தொகையை சிறுபான்மை மாணவர்களுக்காக, நம் திராவிட மாடல் அரசு வருடந்தோறும் தொடர்ந்து வழங்கி வருகிறது.

**எட்டாயிரம் டன் அரிசி!**

ரம்ஜானுக்காக பள்ளிவாசல்களுக்கு சென்ற ஆண்டு 7 ஆயிரத்து 40 டன் அரிசி வழங்கிய நிலையில், இந்த ஆண்டு ரூபாய் 18 கோடியே 42 லட்சம் மதிப்பீட்டில் எட்டாயிரம் டன் அரிசி வழங்க நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

`ஹஜ் புனித யாத்திரை' செல்லும் இஸ்லாமியர்களின் வசதிக்காக சென்னை விமான நிலையம் அருகே, நங்கநல்லூரில் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் `ஹஜ் இல்லம்' கட்டப்படும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார். அதேபோல், இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் இஸ்லாமிய மக்களின் வழிபாட்டுத் தலங்களைப் புனரமைக்க ரூபாய் 10 கோடி அளவிற்கு மானியம் வழங்கப்படும் என்ற நல்ல செய்தியையும் நம் முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்.

ஆகவே, நம் திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கட்டும், நம் திராவிட மாடல் அரசாக இருக்கட்டும் என்றென்றும் உங்களுக்குத் துணை நிற்போம் என்பதை இங்கு பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல் நீங்களும் கழகத்திற்கு என்றென்றும் துணை நிற்பீர்கள் என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, அனைவருக்கும் ரம்ஜான் வாழ்த்துகளை தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்!**

அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மாவட்டக் கழகச்செயலாளர் நே. சிற்றரசு, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவர் பி.டி.எம். மைதீன்கான், கழகத்தின் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளரும், தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினருமான மருத்துவர் சுபேர் கான், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு அரசின் முதன்மை ஹாஜி முகமது அக்பர் அலிஷா ஆயிரி, தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத்தின் தலைவர் ஃபாதர் ஜோ.அருண், ஷியா பிரிவின் தமிழ்நாடு அரசுத் தலைமை ஹாஜி மௌலான குலாம் முகமது மெஹந்திகான், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் பெர்னாண்டஸ் ரத்தின ராஜா, ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூசு, பகுதிக் கழகச் செயலாளர்கள் மதன்மோகன், காமராஜ், ஜோசப் ராஜ், ஜெரால்டு, ஷேக் அப்துல்லா, ரஹ்மத்துல்லா, இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், துணை அமைப்பாளர் இம்ரான், சைதை சாதிக், முத்துக்குமார், ஈஸ்வரி வெங்கடேசன் ஜீ.வி, சையது அபிஸ் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



**நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றைப் படிக்கும்போது நம் அனைவருக்கும் ஒரு விஷயம் தெளிவாகத் தெரியும். மனிதர்கள் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும். நமக்குள் எந்த பேதமும் இருக்கக்கூடாது. ஏழை, எளிய மக்களுக்கு உதவ வேண்டும். நபிகள் நாயகம் சொன்ன அதே கருத்தைப் பின்பற்றியே நம் திராவிட இயக்கமும் தோன்றியது. பேதமில்லா வாழ்வைத் தமிழர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தொடங்கப்பட்டதுதான் நம் திராவிட முன்னேற்றக் கழகம்.**